1980 ஜூலை 18]

திற்கு வந்து சேரவில்லை. ஆகவே, தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி அணைக் கட்டிற்கும் கால்வாய்க்கும் தனி மராமத்துத் பணிகள் செய்ய கேரளா அரசு மதிப்பீடு அனுப்பியுள்ளது.

(இ) ரூ. 5,80,000.

(ஈ) கேரள அரசின் மதிப்பீட்டிற்கு, தமிழ்நாடு அரசு அங்கீகாரம் அளித்தவுடன், மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த செண்பக வல்லி அணையை செப்பனிட வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, கேரள அரசு 5,80,000 ரூபாய்க்கு மதிப்பீடு அனுப்பி இருக்கிறது. தமிழக அரசு தலைமைப் பொறியாளர் கட்டத்திலே அதை ஏற்று கொள்ளலாம் என்று இப்போது அரசுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். எனவே அந்தப் பணியை கேரள அரசே எடுத்துச் செய்வதாக இருப்பதால், கொஞ்சம் காலதாமதம் ஆகின்றது. இருந்தாலும் உடனடியாக அந்த வேலை மேற்கொள்ளப்படும்.

பேருந்து கட்டண உயர்வு

*வினா எண் 19. திரு. என். பழனிவேல் மற்றும் திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளதால் போக்குவரத்து கழகப் பேருந்துக் கட்டணங்களை உயர்த்த செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) பரிசீலனையில் உள்ளது;

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை;

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப் பட்டதன் காரணமாக, அரசு போக்குவரத்துக் கழகங்களுடைய

கட்டணத்தை உயர்த்தக் கூடிய உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா, ஆம் எனில் ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு பைசா உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் நான் முதலிலேயே சொன்னேன். அந்தக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமா, இல்லையா என்று அரசு பரிசிலித்துக் கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் உயர்த்தவேண்டியது தேவையா, இல்லையா என்பது பரிசீலனையில் இருக்கும்போது, இப்போது அதைப்பற்றி சொல்வதற்கில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தப் பெட்ரோல், டீசல் விலை ஏறும்போது, அதன் விளைவாக ஜனங்கள் மத்தியிலே மிகப் பெரிய கஷ்டம் ஏற்படுகிறது என்பது அரசுக்கு தெரியும். அப்படி இருக்கிற அந்த சமயத்தில், அரசாங்கம் நடத்தக் கூடிய பஸ்களிலே கட்டணம் உயர்த்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? அதே போன்று தனியார் துறையிலே இருக்கக்கூடிய பஸ்களில் கட்டணங்களை உயர்த்தக் கூடாது என்று அரசு சொல்லுமா? அப்படி உயர்த்தா விட்டால் நஷ்டம் வரும் என்று சொல்வார்கள் அது நஷ்டம் இல்லை இலாபத்தில்தான் குறைவு ஏற்படும் என்று சொல்லி, அதனால் ஜனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எனவே உயர்த்தக் கூடாது என்று அரசு ஆணையிடுமா? எங்கே விலை ஏறினாலும் அதை ஜனங்கள் தலையிலே போடுவது என்ற நிலையை மாற்றி, இந்த அரசாங்கம் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அடிப்படையில்தான் இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. நிச்சயமாக இந்த அரசாங்கத்துக்கு கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றாலும், இன்றையதினம் விலை ஏற்றத்தின் காரணமாக எவ்வளவு கூடுதல் செலவாகிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஏறத்தாழ 15,450 கிலோ லிட்டர் டீசல் ஒரு மாதத்திற்கு செலவாகிறது. ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.650 விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ ரூ. 103.34 லட்சங்கள் ஒரு மாதத்திற்குக் கூடுதல் செலவாகிறது, இருந்தாலும் அதையெல்லாம் மனதில் கொள்ளாமல் மக்களின் நன்மையைக் கருதி

இந்தக் கட்டணத்தை உயர்த்தாமல் அதை ஈடுகட்டக்கூடிய அளவிற்குத்தான் அரசு தீவிரமாக பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. முடிந்த முடிவாக இப்போது சொல்ல முடியாது என்பதைத்தான் இங்கே நான் எடுத்து வைத்தேன்.

[முற்பகல் 9-20]

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை வெளிநாடுகளில் உள்ளது போல எலக்ட்ரானிக் சிஸ்டத்தில் நகர்ப்புறங்களில் ஓட்டுவதற்கு வசதி வாய்ப்புகளைச் செய்வதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டீசல் விலை உயர்வு காரணமாகவும், மற்ற உதிரிப்பொருள்களின் விலை உயர்வு காரணமாகவும் நாம் வேறு எப்படியாவது ஒரு முறையில் குறைந்த கட்டணத்தில் மக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்துக்கொடுக்க முடியுமா என்கிற கருத்தை ஆராய்வதில் அரசு ஈடுபட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரின் யோசனையையும் எடுத்துக்கொண்டு, ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி நிச்சயமாகச் சிந்திக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், தனியார் பேருந்துகளில் இப்போது அதிகமாக ஓவர்—லோடிங் ஏற்றுகிறார்கள். அந்த ஓவர்—லோடிங் ஏற்றுவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து இருக்கிறதா என்பது தெரியவில்லை. அப்படி அரசாங்கம் அனுமதி கொடுத்து இருந்தால் அதைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், இப்போது ஏறியுள்ள பெட்ரோல், டீசல் விலை காரணமாக தனியார் தன்னிச்சையாகக் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படி கட்டண ரேட்டுகளை ரிவைஸ்செய்து அண்மையில் உத்தரவு ஏதேனும் அரசு போட்டு இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஓவர்-லோடு போடுவதாகச் சொன்னார்கள் அரசாங்கம் நிச்சயமாக அதை அனுமதிக்கவில்லை. போடக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் உத்தரவு. எனவே, அது கண்காணிக்கப்படும். இன்னும் சொல்லப்போனால், நிதி நிலை அறிக்கையில் சொல்லியது போல் 1800 புதிய வழிதடங்கள் போடுகிற நேரத்தில் இந்தக் குறை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் அந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தனியார் பேருந்துக்களில் கட்டணம் உயர்த்திவிட்டதாகச் சொன்னார்கள். தனியார் மட்டும் பேருந்துக் கட்டணங்களை தனியாக உயர்த்திவிட முடியாது. எனவே எங்காவது அப்படி உயர்த்தியிருந்தால் நிச்சயமாக இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் கொடுக்கும்போது போக்குவரத்துத் துறையில் உள்ள பேருந்துகளுக்குத்தான் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் கொடுக்கப் படும் என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் நன்றாக இருக்கும். இருந்தாலும் நான் ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். பேருந்துக் கழகங்கள் அங்கே போய் தலையிடுவதாகச் சொல்கிறார்கள். விவசாயிகளுக்குத் தனியாக கோட்டா ஒதுக்கப்பட்டு இருக் கிறது. எனவே பேருந்துக் கழகங்கள் டீசல் போடுகின்ற காரணத்தால் பாதிக்கப்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவ இப்போது பெட்ரோல் விலை உயர்வு என்ற காரணத்தைக் காட்டி சென்னை நகரில் ஓடுகின்ற டாக்சி ஆட்டோ ஓட்டு நர்கள் எல்லாம் 25 சதவீதம் கூடுதலாகக் கட்டணம் கேட்டு, மீட்ட ருக்கு மேல் அதிகமான தொகையை பயணிகளிடமிருந்து வசூலிக் கிறார்கள். இதைத் தடுப்பதற்கு ஏதாவது ஒரு வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இந்தக் கொடுமையான நிலைமை தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடக்கிறது, ஆகவே, இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர் களே, இது போன்ற புகார்கள் இதுவரையில் எனக்கு வர வில்லை. இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லி இருக்கிறார். நிச்சயமாக அதிகாரிகள் மூலமாக அது கண்காணிக் கப்படும்.